[வலைப்பின்னல் மாற்றுமுறை]

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# *1999 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சட்டம்*

---

[*1999, யூலை மாதம் 16 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.*]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1999, யூலை மாதம் 16 ஆந் திகதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி** II **இற்குக்** *குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை: ரூபா 15.25** **தபாற் செலவு : ரூபா 5.25**

**1999 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சட்டம்**

*(1999 ஆம் ஆண்டின் யூலை மாதம் 16 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.)*

*ச.வ. - ஓ. 24/98*

**கமத்தொழில் மற்றும் தோட்டக்கலைப் பயிர்கள், மூலிகைச் செடிகள், பண்ணை விலங்குகள், மீன்பிடிக் கைத்தொழில், காடு வளர்ப்பு, கமத்தொழிற் சாதனங்களும் கருவிகளும், கமத்தொழில் மற்றும் தோட்டக்கலை உற்பத்திகள், மூலிகைச் செடிகளின் உற்பத்திகள், மீன்பிடி மற்றும் காடுகளுடன் தொடர்புபட்ட உற்பத்திகள் என்பவற்றைக் களஞ்சியப்படுத்தல், பாதுகாத்து வைத்தல் என்பவற்றுக்குக் காப்புறுதி வழங்குவதற்கு ஏற்பாடு செய்வற்கும், கமத்தொழில் புரிபவர்களுக்கு மருத்துவ நலன்களையும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களையும் ஏற்பாடு செய்வதற்குமென கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை ஒன்றைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும், 1973 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, கமத்தொழிற் காப்புறுதிச் சட்டத்தை நீக்குவதற்கும், அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடை நேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-*

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.*

1. இச்சட்டம் 1999 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாமென்பதுடன், அது கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சரால் நியமிக்கப்படக்கூடியவாறான (இதனகத்துப் பின்னர் "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

## பாகம் I

### கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை

*கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையைத் தாபித்தல்.*

2. (1) கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை என அழைக்கப்படவேண்டிய (இதனகத்துப் பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சபையொன்று தாபிக்கப்படல் வேண்டும்.

(2) சபையானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயர் கொண்டு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன், இடையறாவழியுரிமையும் பொது இலச்சினையொன்றும் கொண்டதாதலும் வேண்டும். அத்துடன் அது அத்தகைய பெயர் கொண்டு வழக்குத் தொடரலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடரவும் படலாம்.

சபையின் அமைப்பு

3. சபையானது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) அமைச்சரால் நியமிக்கப்படும் தவிசாளர்;

(ஆ) நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரால் பெயர்குறித்து நியமிக்கப்படும் நிதியமைச்சின் அலுவலர் ஒருவர்;

(இ) கமத்தொழில் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர்;

(ஈ) கடற்றொழில் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர்;

(உ) கால்நடை என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர்;

(ஊ) கமத்தொழில் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அத்தகைய பணிப்பாளர் தலைமையதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் கமத்தொழிற் திணைக்களத்தின் அலுவலர் ஒருவர்;

(எ) கமநலச் சேவைகள் ஆணையாளர் அல்லது அத்தகைய ஆணையாளரால் பெயர்குறித்து நியமிக்கப்படும் கமநலச் சேவைகள் திணைக்களத்தின் அலுவலர் ஒருவர்;

(ஏ) 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித் தொழில் சட்டத்தின் கருத்தெல்லைக்குள்ளாக அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்படுகின்ற உத்தரவுபெற்ற வணிக வங்கியொன்றின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் அல்லது அவரது நியமத்தர்;

(ஐ) அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய விவசாயிகள் சங்கமொன்றின் நியமத்தர்;

*சபையின் தவிசாளர்.*

4. (1) சபையின் தவிசாளர், (4), (5) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, அவரது நியமனத் திகதியிலிருந்து மூன்றாண்டு காலமொன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன், மீள நியமிக்கப்படுவதற்கும் அவர் தகுதியுள்ளவராவார்.

(2) சபையின் தவிசாளர், ஏதேனும் காரணத்தினால் தனது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதிருப்பின், அவரது இடத்தில் செயலாற்றுவதற்கென அமைச்சர் பொருத்தமான எவரும் தகுந்தவருமான ஓர் ஆளை நியமிக்கலாம்.

(3) நிதியென்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரால் தீர்மானிக்கப் படக்கூடியவாறான அத்தகைய விதத்திலும் அத்தகைய வீதங்களிலும் சபையின் தவிசாளருக்கு ஊதியமளிக்கப்படுதல் வேண்டும்.

(4) சபையின் தவிசாளர் அமைச்சருக்கு முகவரியிடப்பட்ட கடிதமூலம் தவிசாளர் பதவியைத் துறக்கலாம்.

(5) சபையின் தவிசாளரை அமைச்சர் எந்தவொரு நேரத்திலும் அதற்கான எத்தகைய காரணத்தையும் அறிவிக்காமல் தவிசாளர் பதவியினின்றும் அகற்றலாம்.

*கூட்ட நடப்பெண்ணும் கூட்ட நடவடிக்கைகளும்.*

5. (1) சபையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண் மூன்று உறுப்பினர்களாதல் வேண்டுமென்பதுடன், மேற்சொல் லப்பட்டவற்றிற்கமைய, சபையானது அதன் கூட்டங்கள் தொடர்பான நடைமுறையையும் அத்தகைய கூட்டங்களில் அலுவல் கையாளப்படுவ தனையும் ஒழுங்குபடுத்தலாம்.

(2) சபையானது, அதன் உறுப்பினர்கள் மத்தியிலான ஏதேனும் வெற்றிடத்தைப் பொருட்படுத்தாது செயற்படலாம்.

*சபையின் இலச்சினை.*

6. (1) சபையின் இலச்சினை சபையின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்.

(2) சபையின் இலச்சினையானது,சபையினது உறுப்பினர்கள் இருவரது முன்னிலையிலல்லாது ஏதேனும் ஆவணத்தில் அல்லது சாதனத்தில் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் இருவரும் தாம் சமுகமாயிருந்ததற்கு அடையாளமாக அச்சாதனத்தில் கைச்சாத்திடல் வேண்டும்.

(3) சபையின் இலச்சினை சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய விதத்தில் மாற்றப்படலாம்.

சபையின் பணிகள்.

7. பின்வருவன சபையின் பணிகளாகும் :-

(அ) கமத்தொழில் புரிவோருக்கு உறுதிநிலையை ஏற்படுத்திக்கொடுப்பதையும் கமத்தொழில் உற்பத்தியை மேம்படுத்துவதையும் குறிக்கோளாகக் கொண்டு, பெருந்தோட்டப்பயிர்கள் உட்பட பயிர்கள், மூலிகைச் செடிகள், மீன்பிடி கைத்தொழில், காடு வளர்ப்பு மற்றும் பண்ணை விலங்குகள் தொடர்பில் இழப்புக்கெதிராக அவர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கான முழுமையான காப்புறுதித் திட்ட மொன்றைக் கமத்தொழில் புரிவோரின் நலனுக்கென தாபித்தலும் செயற்படுத்தலும் ;

(ஆ) கமத்தொழில் புரிவோரின் கமத்தொழிற் சாதனங்கள் கருவிகள் மற்றும் அசைவுள்ள அத்துடன் அசைவற்ற வேறு ஆதனங்கள் தொடர்பில் காப்புறுதித் திட்டமொன்றை கமத்தொழில் புரிவோரின் நலனுக்கெனத் தாபித்தலும் செயற்படுத்தலும்;

(இ) கமத்தொழில் மற்றும் தோட்டக்கலை உற்பத்திகள் மூலிகைச் செடிகளின் உற்பத்தி, மீன்பிடி மற்றும் காடுகளுடன் தொடர்புபட்ட உற்பத்திகள் என்பவற்றைக் களஞ்சியப்படுத்தலும் பாதுகாத்து வைத்தலும் தொடர்பில் காப்புறுதித் திட்டமொன்றைக் கமத்தொழில் புரிவோரின் நலனுக்கெனத் தாபித்தலும் செயற்படுத்தலும்;

(ஈ) கமத்தொழில் புரிவோரின் நலனுக்கென மருத்துவ நலன்களையும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களையும் தாபித்தலும் செயற்படுத்தலும்;

சபையின் தத்துவங்கள்.

8. சபையானது பின்வரும் தத்துவங்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதனையும் பிரயோகிக்கலாம்:-

(அ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதல், வைத்திருத்தல், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுத்தல் ஈடுவைத்தல், விற்றல் அல்லது வேறு விதத்தில் கையுதிர்த்தல்;

(ஆ) நிதியமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் கொடுக்கப்பட்ட அங்கீகாரத்துடன் சபை தீர்மானிக் கக்கூடியவாறான அத்தகைய விதத்திலும் அத்தகைய பிணைப்பொறுப்பின்மீதும் சபையின் நோக்கங்களுக் காகக் கடன் பெறுதல்;

(இ) சபையின் காப்புறுதிச் செயற்பாடுகளின் எல்லா அம்சங்களைப் பற்றியும் ஆராய்ச்சி நடாத்துதலும் அவ்வாராய்ச்சிக்கு உதவியளித்தலும் அதனை ஊக்குவித்தலும்;

(ஈ) சபையின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசிய மாகக்கூடியவாறான அத்தகைய ஒப்பந்தங்கள் எல்லாவற்றையும், நேரடியாக அல்லது அதன் சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அல்லது முகவர் மூலம் செய்து கொள்ளுதலும் நிறைவேற்றுதலும்;

(உ) சபையின் அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் திறமைகளை மேம்படுத்தும் நோக்கத்திற்காக எதையும் செய்தலும் அத்துடன் சபையின் பணிகளை நிறை-வேற்றுதற்குத் தேவையான ஆட்களுக்குப் பயிற்சி யளிப்பதற்கான வசதிகளை ஏற்பாடு செய்தலும் ;

(ஊ) சபையின் அலுவல்களைத் திறமையாகக் கொண்டு நடாத்துவதற்கு அவசியமெனச் சபையாற் கருதப் படக்கூடியவாறான அத்தகைய பணிகளைப் புரிவதற்குச் சபையின் எவரேனும் உறுப்பினருக்கு அல்லது அலுவலருக்கு அதிகாரமளித்தல் ;

(எ) சபையின் அலுவலர்களினதும் சேசையாளர்களினதும் நியமனம், பதவியுயர்வு, ஊதியம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு, நடத்தை, அவர்களுக்கு லீவு வழங்கல் என்பன உட்பட அதன் அலுவலர்கள் மற்றும் சேவையாளர்கள் தொடர்பில் விதிகளை ஆக்குதல் ;

(ஏ) இச்சட்டத்தின் கீழ் சபையின் பணிகளைப் புரியும் பொருட்டு ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்துடன், 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட கம்பனியுடன், கூட்டுறவுச் சங்கத்துடன் அல்லது வேறு கமநல நிறுவனத்துடன் கூட்டுத் திட்டங்களைச் செய்து கொள்ளுதல் ;

(ஐ) சபையின் நிருவாகம் தொடர்பிலான விதிகளை ஆக்குதல்;

(ஒ) சபையின் பொதுவான அல்லது விசேட பணிப்புக்கு அமைவாக, சபையின் தவிசாளருக்கும் அவரூடாகச் சபையின் எந்தவோர் உறுப்பினருக்கும் அல்லது அலுவலருக்கும், அத்தகைய பணியைத் திறமையாகப் புரிவதற்குக் கையளித்தல் அவசியம் எனக் கருதும் சபையின் அத்தகைய ஏதாயினும் பணியைக் கையளித்தல்:

(ஓ) சபையின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசிய மானவையென அல்லது இடைநேர் விளைவானவை யெனச் சபை கருதுகின்ற மற்றெல்லா விடயங்களை யும் செய்தல்:

*சபையின் பணியாட் டொகுதி.*

9. (1) சபையானது காலத்திற்குக்காலம் தீர்மானிக்கக் கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளின்மீது அதன் பணிகளைத் திறமையாக நிறைவேற்றுவதற்கு அவசியமாகக் கூடிய அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் சபையின் பணியாட்டொகுதிக்கு நியமிக்கலாம்.

(2) சபையின் வேண்டுகோளின் பேரில், பகிரங்க அலுவலர் எவரும், அவ்வலுவலரினதும் பொது நிருவாகம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத்துடனும் சபையினால் அத்தகைய சம்மதத்துடன் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு சபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிப்பப்படலாம்.

(3) பகிரங்க அலுவலர் எவரும் சபையின் பணியாட்டொகு திக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவு, ஏற்ற மாற்றங்களுடன் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்புடைத் தாதல் வேண்டும்.

*(4)* பகிரங்க அலுவலர் எவரும் சபையின் பணியாட்டொகுதிக்குத் நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆந் பிரிவின் (3) ஆம் உட்பிரிவு, ஏற்ற மாற்றங்களுடன் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

(5) சபையானது குறிக்கப்பட்ட காலமொன்றிற்கென அரசாங்கத்துடன் அத்தகைய காலப்பகுதியில் அரசாங்கத்திற்கு சேவையாற்றுவதற்கென ஒப்பந்தமொன்றைச் செய்துகொண்டுள்ளவரான ஆள் எவரையும் வேலைக்கமர்த்துமிடத்து, அவ்வாளினால் சபைக்கு ஆற்றப்பட்ட சேவைக்காலம் எதுவும், அத்தகைய ஒப்பந்தத்திலான கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக, அரசாங்கத்திற்கு ஆற்றப்பட்ட சேவையாகக் கருதப்படல் வேண்டும்.

10. சபையின் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும் தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க அலுவலர்களாகக் கருதப்படல் வேண்டும்.

*சபையின் அலுவலர்களும் சேவையாளர்களும் பகிரங்க அலுவலர்களாகக் கருதப்பட வேண்டுமென்பது.*

11. சபையானது இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட் பட அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படல் வேண்டும் என்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்.

*இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக் குட்படச் சபையானது அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவன மொன்றாகக் கருதப்படல்.*

12. சபை அதனது பணிகளைப் புரிதல் பற்றியும் தத்துவங்களை பிரயோகித்தல் பற்றியும் அமைச்சர் எழுத்திலான அத்தகைய பொதுவான அல்லது சிறப்பான பணிப்புக்களை விடுக்கலாம் என்பதுடன் சபை அத்தகைய பணிப்புக்களுக்குப் பயன்கொடுத்தலும் வேண்டும்.

*சபை தொடர்பில் அமைச்சருக்குள்ள தத்துவங்கள்.*

## பாகம் -II

## காப்புறுதி

*கட்டுப் பணத்தைத் தீர்மானித்தலும் செலுத்துதலும்.*

13. (1) காப்புறுதியின் விடயப்பொருள் அத்துடன் காப்புறுதி எத்தகைய அபாயங்களுக்கு எதிராகச் செய்யப்பட்டுள்ளது எனும் விடயங்கள் பற்றிக் கவனஞ்செலுத்தி, சபையினால் தாபிக்கப்பெற்றதும் தொழிற்படுத்தப்படுகின்றதுமான திட்டங்களின் கீழ் வழங்கப்படுகின்ற காப்புறுதிப் பத்திரங்களுக்காகச் செலுத்தப்படவேண்டிய கட்டுப்பண வீதங்களை சபையானது காலத்திற்குக்காலம் தீர்மானிக்கலாம்.

(2) சபையினால் தாபிக்கப்பட்டுள்ளதும் தொழிற்படுத்தப்படுகின்றதுமான ஏதேனும் திட்டத்தின் கீழ் காப்புறுதிப் பத்திரத்திற்காக சபைக்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற ஒவ்வொரு விண்ணப்பத்தையும் சபை கருத்துக்கு எடுத்தல் வேண்டுமென்பதோடு, விண்ணப்பத்தின் மெய்மை பற்றி அது திருப்தியுறும் பட்சத்தில் ஏனைய விடயங்களுடன் பின்வருவனவற்றைக் காட்டும் காப்புறுதிப் பத்திரமொன்றைச் சபை வழங்குதல் வேண்டும் :-

(அ) பிரேரிப்பவர்களின் அடையாளம்;

(ஆ) காப்புறுதியின் விடயப்பொருள்;

(இ) காப்புறுதி செய்துகொண்டவரின் பெயர்;

(ஈ) காப்புறுதி செய்துகொண்ட காலவளவு;

(உ) காப்புறுதி செய்யப்பட்ட பணத்தொகை;

(ஊ) கட்டுப்பணத் தொகை;

(எ) காப்புறுதி செய்துகொண்ட அழிவுகளும் இழப்புக்களும்;

(ஏ) ஏற்றுக்கொள்ளப்பட்ட அபாயங்களுடன் தொடர்புபட்ட நியதிகள், நிபந்தனைகள் மற்றும் விலக்குதல்கள்;

(ஐ) ஏனைய விதித்துரைக்கப்பட்ட தகவல்கள்;

இழப்புக்கான கோரிக்கை.

14. ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட காரணத்தினால், சபையினால் வழங்கப்பட்ட காப்புறுதிப் பத்திரத்தின் மூலம் காப்புறுதி செய்யப்பட்ட விடயப் பொருளுக்கு முழுமையாகவோ அல்லது பகுதியளவினதாகவோ இழப்பு ஏற்படுமிடத்து, காப்புறுதி செய்துகொண்ட ஆள் அத்தகைய இழப்பு நேர்ந்த பதினான்கு நாட்களுக்குள்ளாக அத்தகைய காப்புறுதியின் விடயப்பொருள் சபையினால் நியமிக்கப்பட்ட எந்த முகவரின் நியாயாதிக்க இடப்பரப்பினுள் அமைந்துள்ளதோ அந்த முகவருக்கு அத்தகைய காப்புறுதிப் பத்திரத்தின் கீழ் காப்புறுதி செய்யப்பட்ட பணத்தொகை தொடர்பாக எழுத்திலான கோரிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

காப்புறுதி வறிதானதாதல்.

15. காப்புறுதி செய்துகொண்டவர்

(அ) காப்புறுதி தொடர்பில், ஏதேனும் முக்கியமான நிகழ்வை மறைத்திருப்பின் அல்லது திரித்துக் கூறியிருப்பின் அல்லது ஏதேனும் மோசடியைச் செய்திருப்பின், அல்லது

(ஆ) அத்தகைய ஒப்பந்தத்தின் நியதிக்கு அல்லது நிபந்தனைக்கு இணங்கியொழுகத் தவறின்,

சபையினால் வழங்கப்பட்டுள்ள காப்புறுதி ஒப்பந்தம் வறிதானதாகிவிட்டதென நீதிமன்றத்தால் வெளிப்படுத்தப்படலாம் என்பதுடன், அத்தகைய ஒப்பந்தம் தொடர்பில் செலுத்தப்பட்ட கட்டுப்பணமானது சபையினால் பறிமுதல் செய்யவும் படலாம்.

கடனுக்குப் பிணையாகக் காப்புறுதிப் பத்திரத்தைச் சாட்டுதல் செய்தல்.

16. சபையினால் வழங்கப்பட்ட காப்புறுதிப் பத்திரமொன்று உடையவர் அல்லது உடையவர்கள் அங்கீகரிக்கப்பட்ட ஒரு கடன் முகவர் நிலையத்தினால் அத்தகைய காப்புறுதிப் பத்திரம் உடையவருக்கு அல்லது உடையவர்களுக்கு வழங்கப்படும் கடனொன்றுக்கான பிணையாக அத்தகைய காப்புறுதிப் பத்திரத்தை அத்தகைய முகவர் நிலையத்துக்குச் சாட்டுதல் செய்யலாம்.

காப்புறுதிப் பத்திரத்தின்கீழ் செலுத்தப்பட வேண்டிய பணத்திலிருந்து கழிப்பனவுகள்.

17. ஆளெவரும் சபையினால் வழங்கப்பட்ட ஏதேனும் காப்புறுதிப் பத்திரத்தின் கீழ் கொடுக்கப்பட வேண்டிய ஏதேனும் பணத்தொகைக்கு உரித்துடையவராயிருப்பதுடன் அங்கீகரிக்கப்பட்ட ஒரு கடன் முகவர் நிலையத்தால் அவ்வாளுக்கு வழங்கப்பட்ட கடனொன்றின் முழுமையான அல்லது பகுதியளவிலான திருப்பிக் கொடுப்பனவாக அல்லது

அக்கடன் மீதான ஏதேனும் வட்டியின் கொடுப்பனவாக, அவ்வாளிடமிருந்து அத்தகைய முகவர் நிலையத்துக்கு ஏதேனும் பணத்தொகை போகுமதியாகவுள்ளதெனச் சபை திருப்திப் பட்டவிடத்து, சபையானது, அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட கடன் முகவர் நிலையத்துக்குப் போகுமதியான பணத்தொகை அத்தகைய கப்புறுதிப் பத்திரத்தின் கீழ் கொடுக்கப்பட வேண்டிய ஏதேனும் பணத்தொகையிலிருந்து கழிக்கப்படவும் அத்தகைய முகவர் நிலையத்துக்கு அனுப்பப்படவும் செய்விக்கலாம்.

*அளிப்பு*

18. காப்புறுதியின் விடயப்பொருளுக்கு நேர்ந்த இழப்பு தொடர்பில் செலுத்தப்பட வேண்டிய பணத்தொகையானது, சபைக்கும் காப்புறுதி செய்துகொண்ட ஆளுக்கும் இடையிலான ஒப்பந்தத்தில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்க கொடுக்கப்படுதல் வேண்டும்.

*கோரிக்கைகள் முதலியவற்றை நிராகரித்தற் கெதிரான மேன் முறையீடுகள்.*

19. (1) சபையினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவர் காப்புறுதி செய்துகொண்ட ஆளொருவரினால் சபையினால் வழங்கப்பட்ட காப்புறுதிப் பத்திரத்திரத்தின் கீழ் இழப்பீட்டுக்கெனச் செய்யப்பட்ட கோரிக்கையை நிராகரிக்குமிடத்து அல்லது அத்தகைய அலுவலர் எவரினாலும் தமக்கு வழங்கப்பட்ட தொகையையிட்டுக் காப்புறுதி செய்துகொண்ட ஆளொருவர் திருப்தியுறாதவிடத்து, காப்புறுதி செய்து கொண்ட அத்தகைய ஆள், விடயத்திற்கேற்றவாறாக, அக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டமை பற்றிய அல்லது அத்தொகை பற்றிய அறிவித்தல் தமக்குக் கொடுக்கப்பட்ட பின்னர் முப்பது நாட்களுக்குள்ளாக, மேன்முறையீட்டுக்கான காரணங்களைக் கூறி, சபைக்கு எழுத்திலான மேன்முறையீடொன்றைச் செய்யலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் காப்புறுதி செய்துகொண்ட ஆளொருவரினால் சமர்ப்பிக்கப்படுகின்ற மேன்முறையீடொன்று அத்தகைய மேன்முறையீடு ஏற்புடைத்தான காப்புறுதிப் பத்திரம் தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்குத் தொடருவதற்கு அவருக்குள்ள உரிமையைப் பாதிக்காததாக அமைய வேண்டும் என்பதுடன், அத்தகைய, ஏதெனுமொரு வழக்குக்கான கால வரையறைக் காலப்பகுதியைக் கணக்கிடும்போது, அம்மேன் முறையீடு சமர்ப்பிக்கப்படுகின்ற தேதியிலிருந்து ஆரம்பித்து அத்தகைய ஏதேனுமொரு மேன்முறையீடு தீர்மானிக்கப்படுகின்ற தேதியில்முடிவடைகின்ற காலப்பகுதியானது கவனிக்கப்படாது விடப்படலும் வேண்டும்

*மீள் காப்புறுதி செய்தல்.*

*20.* அரசாங்கத்துடன் அல்லது மீள் காப்புறுதித் தொழிலை மேற்கொள்ளும் ஏதேனும் உள்ளூர் அல்லது வெளிநாட்டு நிறுவனத்துடன் சபையானது மீள் காப்புறுதி ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளலாம்.

*குறித்துரைக்கப்பட்ட பயிரிகள் பயிரிடப்படும் காணிகளைப் பரிசோதிப்பதற்கான தத்துவம்.*

*21.* (1) சபை அல்லது அதன் சார்பில் சபையால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பயிர் அல்லது காப்புறுதி செய்யப்பட்ட ஏதேனும் பண்ணை விலங்கு இருக்கின்ற காணியினுள் பிரவேசிக்கலாம் என்பதுடன் அதனையும் அதனுடன் தொடர்பான ஆவணங்களையும் பரிசோதிக்கலாம் அத்துடன் அதனை அனுமதித்தலும் அத்தகைய பரிசோதனைக்கு உதவுதலும் அத்தகைய காணியில் இருப்பாட்சி செய்யும் ஆள் ஒவ்வொருவரினதும் கடமையாதலும் வேண்டும்.

(2) முதலாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறும் ஆள் ஒவ்வொருவரும் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவான் முன்னரான சுருக்க முறையிலான விசாரணையின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் நூறு ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

*காப்புறுதி செய்யப்பட்ட காணிக்கான சேதத்தைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுப்பதற்கு காப்புறுதி செய்துள்ள ஓர் ஆளைப் பணிக்கும் தத்துவம்.*

*22.* சபை அல்லது அதன் சார்பில் சபையால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அந்த பயிர் அல்லது பண்ணை விலங்கு தொடர்பில் அத்தகைய பயிருக்கு அல்லது பண்ணை விலங்கிற்கு சேதம் ஏற்படுவதைத் தடுப்பதற்கு அல்லது குறைப்பதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய நடவடிக்கைகளை எடுக்குமாறு இச்சட்டத்தின் கீழ் காப்புறுதி செய்துள்ள ஓர் ஆளை அல்லது காப்புறுதிப் பத்திரத்தை உடையவரைப் பணிக்கலாம்.

## பாகம் -III
### *நிதி*

*சபையின் மூலதனம்.*

*23.* (1) சபையின் தொடக்க மூலதனம் இருபது மில்லியன் ரூபாவாதல் வேண்டும்.

(2) சபையின் தொடக்க மூலதனப் பணத்தொகையானது இலங்கைத் திரட்டு நிதியத்திலிருந்து சபைக்குச் செலுத்தப்படல் வேண்டும்.

(3) சபையின் தொடக்க மூலதனமானது காலத்திற்குக் காலம் சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய தொகையினால் கமத்தொழில் எனும் விடயத்திற்குப் பொறுப்பாகவிருக்கும் அமைச்சரின் ஆலோசனையுடன் அதிகரிக்கப்படலாம்.

*சபையின் நிதியம்.*

24. (1) சபையானது கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதி நிதியம் என அழைக்கப்படக்கூடிய (இதனகத்துப் பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அதன் சொந்த நிதியமொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பின்வருவன அந்நிதியத்துக்குள் செலுத்தப்பட வேண்டும்.

(அ) 23 ஆம் பிரிவின் கீழ் சபைக்குச் செலுத்தப்படுகின்ற அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்;

(ஆ) நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முந்திய நாளன்று 1973 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, கமத்தொழிற் காப்புறுதிச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட கமத் தொழில் காப்புறுதி நிதியத்தின் வரவிலிருக்கும் அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்;

(இ) சபையினால் செய்யப்பட்ட சபையின் முதலீடுகளிலிருந்து வட்டியாகப் பெறப்பட்ட அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்;

(ஈ) கொடையாகவும் நன்கொடைடையாகவும் சபையினால் பெறப்பட்ட அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்;

(உ) சபையினால் அதன் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகித்தலிலும் ஆற்றுதலிலும் பெறப்பட்ட அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்;

(3) இச்சட்டத்தின் கீழ் சபையின் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகித்தலிலும் ஆற்றுதலிலும் அதனால் உறப்பட்ட ஏதேனும் செலவைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவையான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் அந்நிதியத்திலிருந்து செலுத்தப்படல் வேண்டும்.

(4) எதிர்பாராத சம்பவங்களிலிருந்து தோன்றுகின்ற உரிமைக் கோரிக்கைகளைச் சபையின் தற்றுணிபில் கொடுத்து தீர்க்கப் பயன்படுத்தக்கூடிய ஒதுக்கு நிதியமொன்றை உருவாக்குவதற்காகச் சபையானது ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலும் பணத்தொகை ஒன்றை ஒதுக்கீடு செய்தல் வேண்டும்.

25. (1) அமைச்சரினதும் நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவிருக்கும் அமைச்சரினதும் ஒருப்பாட்டுடன் அல்லது அதையொத்த ஒருப்பாட்டுடன் வழங்கப்பட்டதான ஏதேனும் பொதுவான அதிகாரத்தின் நியதிகளுக்கிணங்கச் சபையானது, அதன் கடப்பாடுகளைச் சமாளிப்பதற்காக அல்லது பணிகளைப் புரிவதற்காக, சபைக்குத் தேவைப்படக் கூடியவாறான அத்தகைய பணத்தொகைகளை மேலதிகப் பற்று மூலம் அல்லது வேறு விதத்தில் கடனெடுக்கலாம் அல்லது கடன் நியதிகளின்மேல் இணங்கப் பெற்றுக் கொள்ளலாம். *கடன்வாங்குவதற்குச் சபைக்குள்ள தத்துவங்கள்.*

(2) சபையானது நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாக இருக்கும் அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சராற் கொடுபடும் சம்மதத்துடன் பின்வரும் எல்லா அல்லது எவையேனும் நோக்கங்களுக்காக (1) ஆம் உட்பிரிவின்கீழான கடன் என்ற வகையிலன்றி வேறுவிதத்தில் பணம் கடன் எடுக்கலாம் :-

(அ) சபையின் தொழிலுக்குத் தேவைப்படும் ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைத் தேவைக்கெடுத்தல் அல்லது கொள்ளுதல்;

(ஆ) ஓராம் உட்பிரிவின்கீழ் கடனெடுக்கப்பட்ட ஏதேனும் பணத்தைத் திருப்பிக் கொடுத்தல்;

26. சபையினது தொழிலின் நோக்கத்திற்காக உடனடியாகத் தேவைப்படாதனவான சபையின் எவையேனும் நிதிகள், பெறக் கூடிய உச்ச அளவு வட்டி வீதத்தில் உயர்ந்த பெறுபேறுகள் பெறப்படக்கூடிய பிணையங்களில் சபையினால் முதலீடு செய்யப்படுதல் வேண்டும். *சபையின் நிதிகளை முதலீடு செய்தல்.*

27. சபையானது ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் முப்பத்தோராம் நாள் உள்ளவாறாக அதன் புத்தகங்களை ஐந்தொகைப்படுத்துவித்தல் வேண்டும் என்பதுடன், அக்கணக்கு களையும் ஐந்தொகையையும் தயாரிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப் *கணக்குகளும் ஐந்தொகையும்.*

பட்டுள்ள உத்தியோகத்தரால் கையொப்பமிடப்பட்ட, முதற் குறிப்பிட்ட தேதிவரை தயாரிக்கப்பட்ட சபையின் சொத்துக்கள், பொறுப்புக்கள் பற்றிய சுருக்கமொன்றைக் கொண்டிருக்கும் இலாப நட்டக் கணக்கும் ஐந்தொகையும் அடுத்த ஆண்டு ஏப்பிறல் மாதம் முப்பதாம் தேதிக்குப் பிற்படாத தேதியொன்றில் தயாரிக்கப்படச் செய்தலும் வேண்டும்.

*கணக்குகளின் கணக்காய்வு*

28. அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரை சபையின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தல் தொடர்பாக, ஏற்புடைய தாதல் வேண்டும்.

## பாகம் IV

### பொதுவானவை

*இச்சட்டம் எழுத்திலான வேறு சட்டத்திலும் மேலோங்கி நிற்றல்*

29. காப்புறுதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்திலோ எழுத்திலான வேறேதேனும் சட்டத்திலோ இவைக்கு முரணாகவுள்ள எவை எவ்வாறிருப்பினும் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் பயனுடையனவா தல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அத்தகைய வேறு சட்டத்துக்குமிடையில் ஏதேனும் முரண் அல்லது ஒவ்வாமை காணப்படுகின்றவிடத்து, இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றலும் வேண்டும்.

*வழக்குகள் மீதான பாதுகாப்பு.*

30 (1) வழக்கு அல்லது குற்ற வழக்கு எதுவும்

(அ) இச்சட்டத்தின்கீழ் சபையினால் நல்லெண்ணத்துடன் செய்யப்படும் அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயலுக்காக, சபைக்கு எதிராக அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்பின் மீது அவரால் நல்லெண்ணத்துடன் செய்யப்படும் அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயலுக்காக, சபையின் உறுப்பினர், அலுவலர், சேவையாளர் அல்லது முகவர் எவருக்குமெதிராக

எடுக்கப்படுதல் ஆகாது.

*(2)* இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்பின்மீது எவரேனும் ஆளினால் செய்யப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பாக ஏதெனும் நீதிமன்றத்தில் அவருக்கெதிராக எடுக்கப்பட்ட ஏதேனும் வழக்கில் அல்லது குற்ற வழக்கில் ஓராம்உட்பிரிவின் (ஆ) பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவரான அத்தகைய ஆளினால் உறப்பட்ட செலவுகள் எவையும், அச்செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் கருதினால், நிதியத்திலிருந்து கொடுக்கப்படுதல் வேண்டும்.

குடியரசின் அசைவுள்ளனவும் அசைவற்றனவுமான ஆதனங்கள் சபைக்குக் கிடைக்கக் கூடியனவாதலும் சபைக்கெனக் காணி கொள்ளுதல் சட்டத்தினகீழ் அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதலும்.

*31.* *(1)* குடியரசின் அசைவற்ற ஆதனம் எதுவும் சபையினது தொழிலின் நோக்கத்திற்குத் தேவைப்பட்டவிடத்து, அத்தகைய நோக்கமானது, முடிக்குரிய காணிகள் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய ஆதனத்தைச் சிறப்பு மானியமாக அல்லது குத்தகையாக வழங்கக்கூடிய நோக்கமொன்றெனக் கருதப்படுதல் வேண்டும். அத்துடன் அதற்கிணங்க அக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள், சிறப்பு மானியமாக அல்லது குத்தகையாகச் சபைக்கு வழங்கப்பட்ட அத்தகைய ஆதனத்திற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

*(2)* குடியரசின் அசைவுள்ள ஆதனம் எதுவும் சபையினது தொழிலின் நோக்கத்திற்குத் தேவைப்பட்டவிடத்து, அமைச்சரானவர், சசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அத்தகைய அசைவுள்ள ஆதனத்தின் உடைமையையும் பயன்பாட்டையும் சபைக்கு மாற்றி அதற்கு உரித்தாக்கலாம்.

*(3)* சபையினது தொழிலின் நோக்கத்திற்காக ஏதேனும் அசைவற்ற ஆதனம் கொள்ளப்படத் தேவைப்படுத்தப்பட்டு, அமைச்சரானவர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் உத்தேசக் கொள்ளுதலை அங்கீகரிக்குமிடத்து, அவ்வாதனம் பொது நோக்கமொன்றுக்கெனத் தேவைப்பட்டதெனக் கருதப்படல் வேண்டும். அத்துடன்அதற்கிணங்க காணி கொள்ளுதல் சட்டத்தின் கீழ் அது கொள்ளப்பட்டுச் சபைக்குக் கைமாற்றப்படலாம்.

*(4)* சபையின் நோக்கத்துக்காக காணி கொள்ளுதற் சட்டத்தின் கீழ் ஏதேனும் அசைவற்ற ஆதனத்தைச் சபைக்கெனக் கொள்ளுவதற்காக நட்டஈடாகச் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் பணத்தொகையானது சபையினால் நிதியத்திலிருந்து செலுத்தப்படல் வேண்டும்.

*ஒழுங்கு விதிகள்.*

32. (1) இச்சட்டத்தின் நெறிகளையும் ஏற்பாடுகளையும் நிறைவேற்றும் நோக்கத்திற்காக அல்லது அவற்றிற்குப் பயன் கொடுக்கும் நோக்கத்திற்காக அல்லது இச்சட்டத்தினால் விதித்துரைக்கப்படவேண்டிய விடயங்கள் தொடர்பில் அமைச்சரால் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம்.

(2) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அவ்வொழுங்கு விதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும். அது கசெற்றில் வெளியிடப்பட்டதன் பின்னர் வசதியான வரையில் விரைவாக, அங்கீகாரத்திற்கென்று பாராளுமன்றத்தின் முன் கொணரப்படுதல் வேண்டும். அங்ஙனம் அங்கீகரிக்கப்படாத ஒழங்குவிதியெதுவும், அதற்கு அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் அதற்கு முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி. நீக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*நீக்கமும் நிலைமாறுகால ஏற்பாடும்.*

33. (1) 1973 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, கமத்தொழிற் காப்புறுதிச் சட்டம் இத்தால் நீக்கஞ்செய்யப்படுகின்றது.

(2) 1973 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, கமத்தொழிற் காப்புறுதிச் சட்டம் இத்தால் நீக்கஞ்செய்யப்படுவது எது எப்படியிருப்பினும்

(அ) அச்சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட கமத்தொழிற் காப்புறுதிச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட, அத்துடன் நியமிக்கப்பட்ட தேதிக்கு முந்திய தேதியன்று இருந்துவருகின்றவையுமான எல்லா ஒப்பந்தங்களும், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து சபையுடன் மேற் கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களாகக் கருதப்படல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்கச் செயற்படுத்தப் படுதலும் வேண்டும்

(ஆ) அச்சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட கமத்தொழிற் காப்புறுதிச் சபையினால் அல்லது அச்சபைக்கெதி ராகத் தொடரப்பட்டு நியமிக்கப்பட்ட தேதிக்கு

முந்திய தேதியிலிருந்து வருகின்றவையான எல்லா வழக்குகளும் நடவடிக்கைகளும் சபையினால் அல்லது சபைக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்குகளாகவும் நடவடிக்கைகளாகவும் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து கருதப்படல் வேண்டும் என்பதுடன், அவை அதற்கிணங்கத் தொடர்ந்து நடாத்தப்படுதலும் வேண்டும்

(இ) அச்சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட கமத்தொழிற் காப்புறுதிச் சபைக்குச் சாதகமாக அல்லது அச்சபைக்கு எதிராக வழங்கப்பட்டு, நியமிக்கப்பட்ட தேதிக்கு முந்திய தேதியில் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றவையுமான எல்லாத் தீர்வைகளும் கட்டளைகளும், விடயத்திற் கேற்றவாறாக, சபைக்குச் சாதகமாக அல்லது சபைக்கு எதிராக வழங்கப்பட்ட தேதியிலிருந்து கருதப்படல் வேண்டுமென்பதுடன் அதற்கிணங்கச் செயற்படுத்தப் படுதலும் வேண்டும்

(ஈ) அச்சட்டத்தின் மூலம், 1987 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, கமக்காரர் ஓய்வூதிய சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டச் சட்டம் மூலமாகவும் 1990 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, கடற்றொழிலாளர் ஓய்வூதிய சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டச் சட்டம் மூலமாகவும் கமத்தொழிற் காப்புறுதிச் சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களும் கடமைகளும் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து சபைக்கு உரிமை வழங்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட அதிகாரங்களாகவும் கடமைகளாகவும் கருதப்படல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க முறையே, 1987 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, கமக்காரர் ஓய்வூதிய சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டச் சட்டத்திலும் 1990 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க கடற்றொழிலாளர் ஓய்வூதிய சமூகப் பாதுகாப்பு நலன் புரித் திட்டச் சட்டத்திலும் "கமத்தொழிற் காப்புறுதிச் சபை" எனக் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள குறிப்புகள் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்பட்டவையாகக் கருதப்படல் வேண்டும்.

(உ) நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முந்திய நாளன்று அச்சட்டத்தால் தாபிக்கப்பட்ட கமத்தொழிற் காப்புறுதிச் சபையால் சொந்தமாகக் கொள்ளப்பட்டிருந்தவையும் சபையின் நோக்கத்திற்குப் பயன்படுத்தப்பட்டவையுமான எல்லா அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனங்களும் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து சபைக்குஉரித்தாக்கப்படுதல் வேண்டும் ;

(ஊ) நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முந்திய நாளன்று உள்ளனவான, அச்சட்டத்தினால் தாபிக்கப்பட்ட கமத்தொழில் காப்புறுதிச் சபையின் எல்லாக் கடன்களும் பொறுப்புகளும் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து சபையின் கடன்களாகவும் பொறுப்புகளாகவும் கருதப்படுதல் வேண்டும்;

(எ) நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முந்திய நாளன்று சபையில் தொழிலைஏற்றுக்கொண்டிருப்பவர்களான, அச்சட்டத்தால் தாபிக்கப்பட்ட கமத்தொழில் காப்புறுதிச் சபையின் எல்லா அலுவலர்களும் ஊழியர்களும் நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முந்திய நாளன்று அவர்களுக்கு ஏற்புடைத்தானவான தொழில் நியதி நிபந்தனைகளைவிட வாய்ப்பு குறையாதனவான அத்தகைய நியதி நிபந்தனைகள் மீது தொழிலுக்கமர்த்தப்படுதல் வேண்டும்;

(ஏ) நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முந்திய நாளன்று அச்சட்டத்தால் தாபிக்கப்பட்ட கமத்தொழில் காப்புறுதிச் சபையின் வரவிலிருக்கும் எல்லாப் பணங்களும் அத்தேதியிலிருந்து அச்சட்டத்தால் தாபிக்கப்பட்ட சபையின் நிதியத்திற்கு மாற்றப்பட்ட தாயிருத்தல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

34. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**35,** இச்சட்டத்தில்– பொருள் கோடல்.

"கமத்தொழில் புரிபவர்" என்பது, கமத்தொழில் தோட்டக் கலை மூலிகைச் செடிகள் பண்ணை விலங்கு, மீன்பிடி தொழில் அல்லது காடு வளர்ப்பு தொடர்பிலான ஏதேனும் செயற்பாட்டை கொண்டு நடத்துகின்ற ஆள் ஒருவர், கமநலச் சேவைகள் குழு அல்லது 1979 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க கமநலச் சேவைகள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்ட விவசாயிகள் அமைப்பு அல்லது 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு கம்பனி அல்லது 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப் பட்ட கூட்டுறவுச் சங்கம் அல்லது அப்போதைக்கு வலுவில் இருப்பதான ஏதேனும் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட வேறு ஏதேனும் சங்கம் அல்லது ஏதேனும் அரசசார்பற்ற நிறுவனம் எனப் பொருள்படும்;

"அங்கீகரிக்கப்பட்ட கடன் முகவர் நிலையம்" என்பது இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக சபையினால் அப்போதைக்கு முறையாக அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் கூட்டுறவுச் சங்கம் அல்லது வேறு நிறுவனம் என்று பொருளாகும்.

"தேசிய விவசாயிகள் சங்கம்" என்பது அத்தகைய சங்கத்தினால் வழங்கப்படும் சேவைகளைக் கருத்திற்கெண்டு அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய விவசாயிகள் சங்கம் என்று பொருள்படும்

"விதித்துரைக்கப்பட்ட" என்பது, இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின்கீழ் விதித்துரைக்கப்பட்ட என்று பொருளாகும்;

"பகிரங்கக் கூட்டுத்தாபனம்" என்பது அதன் மூலதனம் முழுமையாக அல்லது பகுதியளவில் அரசாங்கத்தினால் கொடை, கடன் அல்லது வேறுவகையாக ஏற்பாடு செய்யப்பட்டதும், 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டம் தவிர்ந்த எழுத்திலான ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டதுமான ஏதேனும் கூட்டுத்தாபனம், சபை அல்லது வேறு குழு என்று பொருளாகும்;

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம் இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*